# DEPOSITION OF WITNESS
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No:CC.648/2023**

**Prosecution Witnesses : 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : முருகன் | Caste | : |
| Father 's Name | : சுப்புராம் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்)

**25.04.2025**

**முதல் விசாரணை**

நான் சோனைமீனா நகர் திருமங்கலத்தில் குடியிருந்து வருகிறேன். நான் ரியல் எஸ்டேட் பணி செய்து வருகிறேன். விபத்தில் இறந்துபோன போஸ் என்பவர் எனது பெரியப்பா மகன் ஆவார். கடந்த 16.10.2022 அன்று விஷேசத்திற்கு சென்றுவிட்டு திருமங்கலம் டு மேலக்கோட்டை நடுவில் உள்ள பெரியார்காலணி பேருந்து நிறுத்தத்தில் நான் எனது சித்தப்பா சங்குவை பேருந்தில் ஏற்றிவிடுவதற்காக மேற்கு பக்கம் நின்றுகொண்டிருந்தோம். எனது சித்தப்பா பேருந்து வந்ததும் அவர் பேருந்தில் ஏறி திருமங்கலம் சென்றுவிட்டார். இரவு 7 மணியளவில் நான் நின்ற பேருந்து நிறுத்தத்தின் எதிர்புரத்தில் இருந்து போஸ் என்பவர் நான் கொண்டிருந்த பேருந்து நிறுத்தத்தை நோக்கி சாலையை கடப்பதற்காக வந்து கொண்டிருந்தார். அதை நான் பார்த்தேன். மதுரையில் இருந்து விருதுநகர் நோக்கி சென்ற டொயட்டோ டிஎன் 06 எல் 9695 என்ற எண் கொண்ட காரானது வேகமாக வந்து போஸ் மீது மோதி விபத்து ஏற்பட்டுவிட்டது. நான் அங்கே சென்று பார்த்த போது போஸ்க்கு இடதுபக்க தலையில் பலத்த காயம் ஏற்பட்டு இருந்தது. அவர் மயங்கிவிட்டார். ஆம்புலன்சு மூலமாக திருமங்கலம் அரசு மருத்துவனையில் கொண்டு வந்தோம். போஸ் வீட்டிற்கு நான்

தகவல் கூறினேன். பின்பு மேல் சிகிச்சைக்காக வேலம்மாள் மருத்துவமனைக்கு அவரது குடும்பத்தார் கொண்டு சென்றார்கள். அங்கு ஒரு வாரம் சிகிச்சையில் இருந்தார். சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். விபத்து ஏற்படுத்திய மேற்படி வாகனத்தின் ஓட்டுனர் ஆஜர் எதிரி தான் ஆவார். அவரை நான் சம்பவயிடத்தில் பார்த்தேன். விபத்து ஏற்பட்ட மறுநாள் காலை தாலுகா காவல் நிலையம் சென்று நான் சம்பவம் பற்றி புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் கொடுத்தது தான். புகாரில் உள்ள கையெழுத்தும் என்னுடைய கையெழுத்து தான். மேற்படி புகார் அ.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எனது சித்தப்பா சங்கு என்பவரை ரோட்டின் மேல் திசையில் உள்ள பஸ் நிறுத்தத்தில் இருந்து திருமங்கலத்திற்கு பஸ் ஏற்றிவிட்டு பஸ் நிறுத்ததில் நின்று கொண்டிருந்த போது போஸ் என்பவருக்கு விபத்து ஏற்பட்டதாக நான் கூறியுள்ளேனா என்றால் போலிசார் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் இல்ல விழாவிற்கு சென்றுள்ளதாக கூறியுள்ள இடம் கரிசல்பட்டி கிராமம் என்றால் சரிதான். அதே இல்லாவிற்கு போஸ் என்பவரும் வந்தாரா என்றால் அவர் வந்து கொண்டிருந்தார். விபத்து நடந்ததாக சொல்லப்படும் நான்குவழிச்சாலையில் பாதசாரிகள் கடப்பதற்கான எவ்வித குறியீடும் இல்லை என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த இடத்தில் எந்தவிதமான சிக்கனலும் இல்லை என்றால் இல்லை. நான்குவழிச்சாலையில் நடுவில் செண்டர்மீடியேட்டர் உள்ளது என்றால் உள்ளது. அதில் எவ்வித செடிகளும் இல்லை. இரவு 7.30 என்பதால் அந்த இடம் இருட்டாக இருந்ததால் என்றால் அவ்வளவாக இல்லை. வாகனங்கள் எவ்வித விளக்கும் எறியவில்லை. சம்பவயிடத்தில் இருந்து சிறிது தூரம் நடந்து சென்றால் ஒரு ரோட்டில் இருந்து மற்றொரு ரோட்டிற்கு செல்ல பாதை உள்ளதா என்றால் இல்லை. சாலையின் ஒரு பக்கத்தில் இருந்து மற்றொரு பக்கம் செல்ல செண்டர் மீடியேட்டரை கடந்து தான் செல்லவேண்டும் என்றால் சரிதான். இந்த வழக்கில் இறந்துபோனவர் எனது உறவினரா என்றால் எனது பெரியப்பா மகன் ஆவார். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் வணிக வளாகங்கள், கடைகள் இருந்ததா என்றால் இருந்தது. நான் நின்ற பேருந்து நிறுத்ததிலும் எதிர்புறம் உள்ள பேருந்து நிறுத்ததிலும் ஆட்கள் இருந்தார்களா

என்றால் இருந்தார்கள். நான் சம்பவம் நடந்து சத்தம் கேட்ட பிறகு தான் சம்பவயிடத்திற்கு சென்றேனா என்றால் ஆமாம். சம்பவம் பற்றி நேரடியாக தெரியாது என்றாலும் அந்த வாகனம் அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் வந்தது பற்றி தெரியாது என்று சொன்னாலும் சரியல்ல. போஸ் என்பவர் எனக்கு உறவினர் என்பதாலும் விபத்து காப்பீட்டுக்காவும் காப்பீடு தொகை பெறுதவற்காகவும் நான் பொய்யாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கொடுத்த புகார் மனுவில் கொடுத்த சங்கதிகளும் பொய்யான சங்கதிகள் என்று சொன்னாலும் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No:CC.648/2023**

**Prosecution Witnesses : 2**

| | | | |
|---|---|---|---|
| Name | : **தங்கம்** | Caste | : |
| Father 's Name | : **போஸ்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்)

**25.04.2025**

**முதல் விசாரணை**

நான் வில்லாபுரத்தில் குடியிருந்து வருகிறேன். விபத்தில் இறந்துபோனவர் எனது கணவர் ஆவார். சுமார் 2 1/2 வருடங்களுக்கு முன்பு எங்களது பங்காளி வீட்டில் உள்ள விஷேசத்திற்கு செல்வதாக கூறிவிட்டு மேலக்கோட்டை அருகே உள்ள கரிசல்பட்டிக்கு எனது கணவர் சென்றார். எனது கணவர் கிளம்பி சுமார் 1 1/2 மணி நேரம் கழித்து சுமார் மாலை 7.45 மணியளவில் எனது அக்கா மகன் எனக்கு போன் செய்து எனது கணவருக்கு மேலக்கோட்டை பேருந்து நிறுத்ததில் அருகே விபத்து ஏற்பட்டதாக கூறினார். எனது கணவரை அங்கு உள்ளவர்கள் திருமங்கலம் அரசு மருத்துவமனையில் சேர்த்துஅங்கு இருந்து மேல் சிகிச்சைக்காக வேலம்மாள் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள், நானும் எனது மகன் ஸ்ரீதரும் வேமலம்மாள் மருத்துவமனை சென்று எனது கணவரை நான் பார்த்த போது எனது கணவரின் வலது தலை பகுதி மற்றும் கன்னம் ஆகிய பகுதிகளில் பலத்த காயம் ஏற்பட்டு இருந்தது. எனது கணவர் மயக்க நிலையில் இருந்தார். 10 நாட்கள் சிகிச்சையில் இருந்தார். அதன் பின்பு சிகிச்சை பலனின்றி எனது கணவர் இறந்துவிட்டார். எனது கணவர் சாலையை கடக்க

முயன்ற போது விபத்து ஏற்பட்டதாக தெரிந்துகொண்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த விபத்து சம்பந்தமாக எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான்.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No:CC.648/2023**

**Prosecution Witnesses : 3**

| | | | |
|---|---|---|---|
| Name | : **சந்திரசேகர்** | Caste | : |
| Father 's Name | : **போஸ்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்)

**25.04.2025**

**முதல் விசாரணை**

நான் வில்லாபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் பொறியாளராக பணி செய்து வருகிறேன். விபத்தில் இறந்துபோனவர் எனது அப்பா ஆவார். கடந்த 16.10.2022 அன்று திருமங்கலம் மேலக்கோட்டை கரிசல்பட்டி விஷேசத்திற்காக சென்றிருந்தார். அன்று இரவு 8 மணியளவில் சாலையை கடக்க முயன்ற போது எனது அப்பாவிற்கு விபத்து ஏற்பட்டதாக அ,சா-1 எனக்கு போன் மூலம் தகவல் கூறினார். சம்பவ தினத்தில் நான் சென்னையில் இருந்தேன். மறுநாள் காலை கிளம்பி வந்து வேலம்மாள் மருத்துவமனை சென்று எனது அப்பாவை பார்த்தேன். எனத அப்பாவை பார்த்த போது எனது அப்பாவிற்கு வலது பக்க தலை மற்றும் கண் அருகே பலத்த காயம் ஏற்பட்டு இருந்தது. 9 நாட்கள் சிகிச்சையில் இருந்த எனது அப்பா 09.10.2022 அன்று இறந்துவிட்டார். விருதுநகரை சேர்ந்த அருண்சுந்தர் என்பவர் டொயட்டோ காரை விருதுநகரில் இருந்து மதுரைநோக்கி வந்த போது எனது அப்பா மீதுமோதி விபத்து ஏற்பட்டதாக தெரிந்து கொண்டேன்.போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவம் நடந்தது பற்றி எனக்கு  நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

# DEPOSITION OF WITNESS
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No:CC.648/2023**

**Prosecution Witnesses : 4**

| | | | |
|---|---|---|---|
| Name | : ஸ்ரீதர் | Caste | : |
| Father 's Name | : போஸ் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்)

**25.04.2025**

**முதல் விசாரணை**

நான் வில்லாபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் தனியார் நிறுவனத்தில் பணி செய்து வருகிறேன். விபத்தில் இறந்துபோன போஸ் எனது அப்பா ஆவார். கடந்த 16.10.2022 அன்று எனது உறவினர் வீட்டு விஷேசத்திற்காக மேலக்கோட்டை அருகே உள்ள கரிசல்பட்டிக்கு எனது அப்பா சென்றார். அன்று மாலை 7.30 மணியளவில் அ.சா.1 எனக்கு போன் செய்து பஸ் நிறுத்தத்தில் அப்பாவிற்கு விபத்து ஏற்பட்டுவிட்டது. திருமங்கலம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்கிறோம் என கூறினார். திருமங்கலம் அரசு மருத்துவமனையில் இருந்து மேல் சிகிச்சைக்காக வேலம்மாள் மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். எனது அப்பாவின் வலதுபுறம் தலை பகுதியில் பலத்த காயம் ஏற்பட்டு இருந்தது. எனது அப்பா மயக்க நிலையில் இருந்தார். சுமார் 10 நாட்கள் அந்த சிகிச்சையில் இருந்தார். சிகிச்சை பலனின்றி எனது அப்பா இறந்துவிட்டார். கார் மோதி விபத்து ஏற்பட்டதாக தெரிந்துகொண்டேன். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவ தினத்தன்று நான் மதுரையில் இருந்தேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்தது பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.